1972 சனவரி 25]

ஆராய்ந்து சில யோசனைகளை இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் குழுவினர் பரிசீலித்து வருகிறார்கள். அதற்காக அவருக்கு ரெம்யூனரேஷன் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்கிற விவரம் குறிப்பில் இல்லை.

பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள்

***39 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 2,206 பேர்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

***40 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

படிப்பிற்கிடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை

***41 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்ஜினியரிங் கல்லூரிகளிலும் "சாண்ட்விச் படிப்பு முறை" (படிப்புக்கு இடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-73-ல் ஒன்று அல்லது இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த சாண்ட்விச் படிப்பு முறையின்படி எத்தனை மணி நேரம் படிப்பு, எத்தனை மணி நேரம் தொழில் பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது? தொழிற்